# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 345 | 4 Pages | 7.7.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 345 | 4 பக்கங்கள் | 7.7.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## அசாமில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதல்மந்திரி நேரில் ஆய்வு

கவுகாத்தி, ஜூலை 7

அசாமில் பெய்த கனமழையால் மாநிலத்தில் உள்ள முக்கிய ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக 29 மாவட்டங்களில் உள்ள 22 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம், நிலச்சரிவு மற்றும் புயல் பாதிப்புகளில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 3 பேர் மாயமாகியுள்ளனர்.

மாநிலம் முழுவதும் 698 முகாம்களில் மொத்தம் 39,338 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் திர்ருகார் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்மந்திரி ஹிமாந்தா பிஸ்வா சர்மா நேரில் ஆய்வு செய்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மின்தடை ஏற்பட்டுள்ள நிலையில், தங்களுக்கு மீண்டும் மின்சாரத்தை வழங்குமாறும் முதல் மந்திரி ஹிமாந்தா பிஸ்வா சர்மாவிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இருப்பினும் விபத்துகளை தவிர்ப்பதற்காகவே மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், நிலைமை சீரானதும் உடனடியாக மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வேலையில் அலட்சியம்: பணியிடை நீக்கம் செய்து கலெக்டர் உத்தரவு

மும்பை, ஜூலை 7

மராட்டியத்தில் பணியில் அலட்சியமாக இருந்ததாகக் கூறி இரண்டு வருவாய்த்துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மராட்டியத்தின் பீட் மாவட்டத்தில் மணல்கொள்ளை நடப்பதாக மாவட்டகலெக்டருக்கு கிடைத்ததகவலின் அடிப்படையில் சோதனை செய்தபோது, மணல்கொள்ளை நடப்பது உறுதியானது.

இதனையடுத்து, மணல்கொள்ளையை கண்டுகொள்ளாமல், அலட்சியமாக இருந்ததாகக் கூறப்படும் வருவாய்த்துறை அதிகாரிகளான சுதாகர் அந்தலே மற்றும் கிரண் பிரபாகர் தந்தே ஆகிய இருவரையும் பணி இடைநீக்கம் செய்து, பீட் மாவட்ட கலெக்டர் அவினாஷ் பதக் உத்தரவிட்டுள்ளார்.

## சந்திரசேகர ராவ் கட்சியின் 6 எம்.எல்.சி.க்கள் காங்கிரசில் இணைந்தனர்

ஐதராபாத், ஜூலை 7

தெலுங்கானா மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், அம்மாநிலத்தின் எதிர்க்கட்சியான சந்திரசேகர ராவின் பி.ஆர்.எஸ். கட்சியின் 6 எம்.எல்.சி.க்கள் (சட்டசபையின் மேலவை உறுப்பினர்கள்) நேற்று காங்கிரசில் இணைந்துள்ளனர். தண்டே விட்டல், பானுபிரசாத், தயானந்த், பிரபாகர் ராவ், பசவராஜு, மல்லேசம் ஆகிய 6 எம்.எல்.சி.க்களும் தெலுங்கானா காங்கிரஸ் தலைவரும், முதல்மந்திரியுமான ரேவந்த் ரெட்டி தலைமையில் காங்கிரசில் இணைந்தனர்.

முன்னதாக பி.ஆர்.எஸ். எம்.எல்.ஏ.க்கள் சஞ்சய் குமார், ஸ்ரீனிவாஸ் ரெட்டி, கடியம் ஸ்ரீஹரி, தனம் நாகேந்தர், டெல்லம் வெங்கட் ராவ் ஆகியோர் காங்கிரசில் இணந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து சந்திரசேகர ராவ் கட்சியின் உறுப்பினர்கள் காங்கிரசில் இணைவதால் அக்கட்சிக்கு இது பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

## நீட் தேர்வு முடிவுகளை ரத்துசெய்யக்கூடாது: சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு வலியுறுத்தல்



புதுடெல்லி, ஜூலை 7

நடந்து முடிந்த நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகளும், குளறுபடிகளும் நடைபெற்றது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழலில், நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக பல்வேறு வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, நடந்து முடிந்த நீட் தேர்வை ரத்துசெய்ய வேண்டும், முறைகேட்டில் ஈடுபட்டவர்களின் மதிப்பெண்ணை ரத்துசெய்ய வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகள் சுப்ரீம் கோர்ட்டில் முன்வைக்கப்பட்டன. இவை அனைத்திற்கும் பதிலளிக்க வேண்டும்எனமத்தியஅரசுக்குசுப்ரீம்கோர்ட்டுநோட்டீஸ்அனுப்பியிருந்தது. வரும் 8ந்தேதி இந்த வழக்கின் விரிவான விசாரணை நடைபெற உள்ளது.

இந்த நிலையில், மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் பிரமான பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில், நடந்து முடிந்துள்ள நீட் தேர்வை ரத்து செய்யக்கூடாது என சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மேலும் மத்திய அரசு தெரிவிக்கையில்,

★ நீட் தேர்வு முடிவுகளை ரத்துசெய்யக்கூடாது.

★ நடந்து முடிந்த நீட் தேர்வில் பெரிய அளவில் முறைகேடுகள் நடந்ததற்கு ஆதாரமில்லை.

★ நடந்து முடிந்த நீட் தேர்வை ரத்துசெய்வதால் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

★ நீட் தேர்வு முறைகேடு புகார்களை விசாரிக்க சிபிஐக்கு உத்தரவிட்டுள்ளோம்.

★ தேர்வுகள் வெளிப்படைத்தன்மையுடனும், நியாயமாகவும் நடைபெற புதிய சட்டத்தை இயற்றியுள்ளோம்.

★ நியாயமற்ற வழிமுறைகள் தொடர்பான குற்றங்களுக்கு கடும் தண்டனையை சட்டம் அளிக்கும்.

★ தேர்வுகளை திறம்பட நடத்த, பரிந்துரைகளை அளிக்க உயர்மட்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி முதல்அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 7

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் வட்டம் திருராமேஸ்வரம் கிராமம் கோட்டகச்சேரி பகுதியிலுள்ள கோவில் திருவிழாவிற்கு விளம்பரப் பதாகைகள் வைப்பதற்காக கடந்த 29ம் தேதி இரவு 11.30 மணியளவில் அக்கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் மதன்ராஜ் விளம்பரப் பதாகைகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது எதிர்பாராதவிதமாக அருகிலுள்ள மின்மாற்றியில் இரும்பு கம்பியுடன் கூடிய விளம்பர பதாகையில் உராய்வு ஏற்பட்டதன் காரணமாக மின்சாரம் தாக்கியதில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.




மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவன் ரூபனுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு 2 லட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவனின் பெற்றோருக்கு 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூலை 7

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டிருக்கிறார்.


அதையே நானும் சொல்கிறேன். விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்.

சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்கள் யார்? என்பதை மக்கள் புரிந்து கொள்ள சில உண்மைகள்:

1. தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்த பிறகும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல் சமூகநீதிக்கு துரோகம் இழைப்பது யார்?

2. தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீட்டின் மீது கத்தி தொங்கிக் கொண்டிருக்கும் நிலையில், இட ஒதுக்கீடே போனாலும் பரவாயில்லை என்று சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாடோம் என முரண்டு பிடிப்பது யார்?

3. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது, அந்த இட ஒதுக்கீட்டை நீக்காமல் ஓய மாட்டோம் என்று கூட்டம் நடத்தி முழக்கமிட்டது எந்த சமூகம்? அந்தக் கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மருத்துவர் ஜெயராஜ மூர்த்தி யாருடைய மைத்துனர்? 4. தமிழ்நாட்டில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் பி.சி./எம்.பி.சி வகுப்பினருக்கான இடங்களை பட்டியலினத்தவருக்கு ஒதுக்கலாம், ஆனால், பட்டியலினத்தவருக்கும், பழங்குடியினருக்குமான இடங்களை அவர்களில் யாரும் இல்லாத சூழலிலும் யாருக்கும் ஒதுக்கக் கூடாது என்று ஆணையிட்டிருப்பது எந்த அரசு? 5. தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கலாம் என்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்து இரண்டரை ஆண்டுகள் ஆகியும், வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்காமல் ஏமாற்றுவது யார்?



6. 2019ம் ஆண்டில் விக்கிரவாண்டியில் இடைத்தேர்தல் நடைபெற்ற போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வன்னியர்களுக்கு 15% இட ஒதுக்கீடு வழங்குவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த பிறகு அதை நிறைவேற்றாமல் ஏமாற்றுவது யார்? 7.தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் மக்கள்தொகை கிட்டத்தட்ட 22% ஆக அதிகரித்துள்ள நிலையில், அதற்கு இணையாக அவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரிக்காதது எந்த அரசு?

8. சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் பட்டியலினத்தை சேர்ந்தவர் என்பதாலேயே பேராசிரியர் தனலட்சுமிக்கு துறைத்தலைவர் பதவி மறுக்கப்பட்டதை கண்டுகொள்ளாமல் வேடிக்கைப் பார்ப்பது யார்?

9. தமிழ்நாட்டில் பட்டியலின மக்களின் நலன்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அவர்களின் நலன்களுக்காக பயன்படுத்தாமல் வேறு திட்டங்களுக்கு திருப்பி விட்டது எந்தக் கட்சி அரசு? 10. கள்ளக்குறிச்சி கருணாபுரத்தில் விஷ சாராயம் குடித்து உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையினர் பட்டியலின மக்கள். விஷ சாராய உயிரிழப்புகள் குறித்த உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்காக சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட முடியாது என்று கூறி குற்றவாளிகளை பாதுகாப்பது எந்தக் கட்சி அரசு? மேற்கண்ட அனைத்து வினாக்களுக்கும் விடை திமுக., மு.க.ஸ்டாலின் என்பது தான். ஆகவே, விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களே சிந்திப்பீர், செயல்படுவீர், விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கொல்லங்கோடு நகராட்சி மற்றும் வார்டு உறுப்பினரிடம் கோரிக்கை மனு அளித்த நாம் தமிழர் கட்சியினர்



கன்னியாகுமரி, ஜூலை 7

நாம் தமிழர் கட்சி கிள்ளியூர் மேற்கு தொகுதி கொல்லங்கோடு நகர கிழக்கு செயலாளர் ஷாஜி தலைமையில் முன்னாள் தொகுதி தலைவர் சிவச்சந்திரன் முன்னிலையில் கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் இணைந்து கொல்லங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட 30 வது வார்டு ஏலாக்கரை பாணந்தோப்பு சாலையில் சில மாதங்களாக தேங்கி நிற்கின்ற மழை நீரை அகற்ற கோரியும் சாலையில் மழைநீர் தேங்காமல் நிரந்தரமாகசாலையைஉயர்த்தி மழைநீர் தேங்காமல் சாலையை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சாலை அமைக்க கோரி கொல்லங்கோடு நகராட்சியில் கோரிக்கை மனு அளித்தனர். பின்னர் வார்டு உறுப்பினர் டெல்மாவை நேரில் சந்தித்து உடனடியாக முன்னுரிமை அடிப்படையில் சாலையில் நிரந்தரமாக மழைநீர் தேங்காய் வண்ணம் நடவடிக்கை எடுக்க கோரி கோரிக்கை மனு வழங்கினர். கன்னியாகுமரி மாவ ட்ட ஆட்சித் தலைவருக்கு அஞ்சல் வாயிலாகவும் கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

## விஜயகாந்தை செயற்கை நுண்ணறிவு மூலம் படங்களில் பயன்படுத்தாதீர்கள் பிரேமலதா

சென்னை, ஜூலை 7

விஜயகாந்தை செயற்கை நுண்ணறிவு மூலம் படங்களில் பயன்படுத்தாதீர்கள் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அக்கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது; தமிழ் திரை உலகை சேர்ந்த அனைவருக்கும் அன்பான வேண்டுகோள், புரட்சிக் கலைஞர் கேப்டனை ஏஐ தொழில்நுட்பத்தின் (AI TECHNOLOGY) மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக தொடர்ந்து செய்திகள் வருகிறது. எனவே இதுபோன்ற செய்திகள் ஆடியோ வெளியீட்டு விழாவில் வருகின்றது. எங்களிடம் முன் அனுமதியில்லாமல் இது மாதிரியான அறிவிப்புகள் வருவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். எந்த விதத்தில் பயன்படுத்துவதாக இருந்தாலும் முறையாக அனுமதி பெற்ற பின்பே, அறிவிப்பை வெளியிட வேண்டும். ஏஐ தொழில்நுட்பத்தின் (AI TECHNOLOGY) மூலம் திரைப்படங்களில் பயன்படுத்த இருப்பதாக இதுவரை யாரும் எந்த அனுமதியும் பெறவில்லை என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே அனுமதியில்லாமல் பத்திரிகை செய்திகள், ஊடக செய்திகள், ஆடியோ வெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பகுஜன் சமாஜ் மாநில தலைவர் படுகொலை: 8 பேர் சரண்

சென்னை, ஜூலை 7

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங். இவர் நேற்று மாலை தனது வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தார். அப்போது பைக்குகளில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் ஆம்ஸ்ட்ராங்கை அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச்சென்றது. இந்த கொடூர தாக்குதலில் படுகாயமடைந்த ஆம்ஸ்ட்ராங்கை அருகில் இருந்தவக்ரள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஆம்ஸ்ட்ராங் சிகிச்சைபலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த கொலை சம்பவத்திற்கு பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி உள்பட பலர் கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து, பகுஜன் சமாஜ் தமிழ்நாடு மாநில தலைவர்ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்துவிட்டு தப்பியோடிய கும்பலை போலீசார் 6 தனிப்படைகள் அமைத்து தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில், பகுஜன் சமாஜ் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் 8 பேர் போலீசில் சரண்டைந்துள்ளனர். ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ததாக ஆற்காடு சுரேஷின் சகோதரர் ஆற்காடு பாலு உள்பட 8 பேர் அண்ணாநகர் துணை ஆணையர் முன் சரணடைந்துள்ளனர். சரணடைந்த 8 பேரையும் கைது செய்த போலீசார் இந்த கொலைக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மனைவியை கட்டையால் அடித்துக்கொன்ற தொழிலாளி கைது

கூடலூர், ஜூலை 7

நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுகா தேவர் சோலை பேரூராட்சி மச்சிக்கொல்லி பேபி நகரை சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (47 வயது). கூலித்தொழிலாளி. இவருடைய மனைவி குஞ்சு(45 வயது). இந்த நிலையில் ரவிச்சந்திரன் கர்நாடக மாநிலத்துக்கு கூலி வேலைக்கு சென்றிருந்தார். அவர் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வீடு திரும்பினார். அப்போது வீட்டில் அவரது மனைவி குஞ்சு இல்லை. இதனால் அவரது வருகைக்காக ரவிச்சந்திரன் காத்திருந்தார். நீண்டநேரம் ஆகியும் வராததால் அவர் ஆத்திரம் அடைந்தார்.

பின்னர் இரவில் குஞ்சு வீட்டுக்கு வந்தார். உடனே அவரிடம், இவ்வளவு நேரம் எங்கு சென்றாய்? என்று ரவிச்சந்திரன் கேட்டார். அப்போது அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இது முற்றிய நிலையில் கைகலப்பானது. இதில் கோபத்தின் உச்சிக்கு சென்ற ரவிச்சந்திரன் வீட்டில் இருந்த கட்டையை எடுத்து குஞ்சுவின் தலையில் ஓங்கி அடித்தார். இதில் பலத்த காயம் அடைந்த அவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து ரவிச்சந்திரன் யாரிடமும் தெரிவிக்கவில்லை. நேற்று காலையில் குஞ்சு வீட்டை விட்டு வெளியே வரவில்லை.



இதை கண்டு சந்தேகம் அடைந்த அக்கம்பக்கத்தினர் அவரது வீட்டுக்கு சென்று பார்த்தனர். அப்போது குஞ்சு கொலை செய்யப்பட்டு இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த கூடலூர் போலீஸ் துணை சூப்பிரண்டு வசந்தகுமார், மசினகுடி இன்ஸ்பெக்டர் சிவக்குமார், சப் இன்ஸ்பெக்டர்கள் கோவிந்தராஜ், இப்ராஹிம் தலைமையிலான தனிப்படை போலீசார் விரைந்து வந்து பார்வையிட்டனர். பின்னர் ரவிச்சந்திரனை கைது செய்து விசாரணை நடத்தினர்.

அதில் அவர், குடும்பதகராறு காரணமாக குடிபோதையில் குஞ்சுவை அடித்து கொன்றதாக தெரிவித்தார். இதையடுத்து போலீசார் குஞ்சுவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கூடலூர் அரசு ஆஸ்பத்திரி அனுப்பி வைத்தனர். மேலும் ரவிச்சந்திரனை கூடலூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பா.ஜனதா தலைமை அலுவலகமான கமலாலயத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, ஜூலை 7

சென்னை தி.நகரில் உள்ள பா..ஜனதா தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து பா.ஜனதா அலுவலகத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் சோதனை நடத்தினர்.

சோதனையில் அவை புரளி என தெரியவந்தது. இது குறித்து மாம்பலம் போலீசார் விசாரணை நடத்தியதில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரின் செல்போன் எண்ணை ஆய்வு செய்ததில் வேலூர் மாவட்டத்தில் இருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# தமிழ்நாட்டிற்கு காவிரியில் உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும் : டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 7

பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கர்நாடகத்தின் குடகு மலை மற்றும் கேரள மாநிலத்தின் வயநாடு பகுதிகளில் உள்ள காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. அதன் காரணமாக கர்நாடகத்தில் காவிரி மற்றும் அதன் துணை ஆறுகளின் குறுக்கேகட்டப்பட்டுள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளுக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அதுமட்டுமின்றி, கபினி அணை நிரம்பும் தருவாயில் உள்ளது. மொத்தம் 19.52 டி.எம்.சி கொள்ளளவு கொண்ட கபினி அணை நிரம்புவதற்கு இன்னும் ஒரு டி.எம்.சி தண்ணீர் மட்டுமே தேவை. இதே அளவில் நீர் வரத்து தொடர்ந்தால், அடுத்த இரு நாட்களில் கபினி அணை நிரம்பி விடும் வாய்ப்பு உள்ளது. இம்மாத இறுதிக்குள் நான்கு அணைகளும் நிரம்பும் வாய்ப்பு இருப்பதாக கர்நாடக நீர்வளத்துறை பொறியாளர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.



கர்நாடகத்தில் காவிரி அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்புகளின் அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதுதான் நியாயம் ஆகும். ஆனால், தமிழகத்திற்கு தண்ணீர் விடுவது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிடாத கர்நாடக அரசு, வரும் 8ம் தேதி முதல் கர்நாடக பாசனத்திற்காக பாசனக் கால்வாய்கள் மூலம் தண்ணீர் திறக்கவிருப்பதாக அறிவித்திருக்கிறது. இது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும். இதன் மூலம் காவிரி சிக்கலில் கர்நாடகம் வழக்கம்போல், அதன் உண்மை முகத்தைக்காட்டியுள்ளது.

காவிரி நீர்ப்பகிர்வு வழக்கில் 2018ம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பின்படி நடப்பாண்டின் ஜூன் மாதத்தில் 10 டி.எம்.சி, ஜூலை மாதத்தில் 34 டி.எம்.சி என இம்மாத இறுதிக்குள்ளாக 44 டி.எம்.சி தண்ணீரை திறந்துவிட வேண்டும். ஆனால், இதுவரை ஒரு டி.எம்.சி தண்ணீரைக் கூட தமிழ்நாட்டுக்கு கர்நாடகம் வழங்கவில்லை. இதை எந்த வகையிலும் நியாயப்படுத்தவே முடியாது.

காவிரியில் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்து விடுவதற்கான தமது கடமையை கர்நாடக அரசு உணர மறுப்பதும், காவிரியில் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறக்காமல் இருக்கும் தண்ணீர் முழுவதையும் தாங்களே பயன்படுத்திக்கொள்ளத் துடிப்பதும் நியாயமற்றதாகும். கர்நாடகத்தின் இந்த செயல்களை கண்டு கொள்ளாமல் தமிழக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும், கர்நாடகத்திடமிருந்து காவிரியில் தண்ணீர் பெற எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அமைதி காப்பதும் காவிரி பாசன மாவட்ட உழவர்களுக்கு இழைக்கப்படும் துரோகம். இதை அனுமதிக்க முடியாது.

காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகளை தாரை வார்த்து விட்டு, உறங்கும் போக்கை கைவிட்டு, நமது உரிமைகளை காக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு மற்றும் காவிரி மேலாண்மை ஆணையத்தை அணுகி, தமிழ்நாட்டிற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடும்படி வலியுறுத்த வேண்டும். அதன் மூலம் காவிரி டெல்டா உழவர்களை அரசு காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரேஷன் பொருட்கள் விநியோகத்தில் தட்டுப்பாடு: அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, ஜூலை 7

அதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"தமிழ்நாடு முழுவதும் மூன்று மாதமாக துவரம் பருப்பு, பாமாயில் உள்ளிட்ட ரேஷன் பொருட்கள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. சென்ற மாதமே இதுகுறித்து நான் சுட்டிக்காட்டி இருந்த நிலையில், இதுவரை ரேஷன் பொருட்கள் விநியோகத்தை சீர்செய்யத் தவறிய நிர்வாகத்திறனற்ற தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனம். ரேஷன் பொருட்களை முறையாக கொள்முதல் செய்து விநியோகிப்பதில் என்ன சிக்கல் இருக்கிறது? ஏழை மக்களின் எண்ணங்கள் அறிந்த எந்த ஒரு அரசும் ரேஷன் தட்டுப்பாடு நிகழவிட்டிருக்காது. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, மக்கள் மீது துளியும் அக்கறையற்ற அரசு என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.



மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான ரேஷன் பொருட்களின் விநியோகத்தில் கவனம் செலுத்தி, அனைத்து ரேஷன் பொருட்களும் மக்களை சென்றடைவதை உறுதிசெய்ய தி.மு.க. முதல்வரை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# நியாய விலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்: டி.டி.வி. தினகரன் பேச்சு

சென்னை , ஜூலை 7

அமமுக பொதுசெயலாளர் டி.டி,வி. தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழகத்தில் இயங்கி வரும் நியாய விலைக்கடைகளில் தொடர்ந்து மூன்றாவது மாதமாக பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடும் தட்டுப்பாட்டால் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



ஏற்கனவே, கடந்த மே மற்றும் ஜூன் ஆகிய இரு மாதங்களில் வழங்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் முறையாக விநியோகம் செய்யப்படாத நிலையில், நடப்பு மாதத்திலும் பாமாயில், பருப்பு போன்ற பொருட்களை வழங்காமல் குடும்ப அட்டைதாரர்களை அலைக்கழிப்பது கடும் கண்டனத்திற்குரியது.

நியாய விலைக்கடைகளில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவு அதிகரிக்கப்படும், உளுத்தம்பருப்பு மீண்டும் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாத நிலையில், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது பொது விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதில் திமுக அரசின் தோல்வியை வெளிப்படுத்துகிறது.

நியாய விலைக்கடைகளில் நிலவும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு குறித்து பலமுறை சுட்டிக்காட்டியும் எந்த வித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசால், பருப்பு, பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருட்களை அதிக விலை கொடுத்து வெளிச்சந்தையில் வாங்கும் சூழலுக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, வழக்கம் போல இம்முறையும் ஏதாவது காரணத்தைக் கூறி காலம்தாழ்த்தாமல், தமிழகத்தில் இயங்கிவரும் நியாய விலைக்கடைகளில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருட்களும்தடையின்றிகிடைப்பதை தமிழக அரசுஉறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார்.

# கள்ளத்தொடர்பை கண்டித்த வடமாநில பெண் அடித்துக்கொலை: கணவர் வெறிச்செயல்



கரூர், ஜூலை 7

கரூர் மாவட்டம், புகழூர் ரெயில் நிலையம் அருகே உள்ள கொங்குநகரை சேர்ந்தவர் முருகையன். இவருக்கு சொந்தமாக அப்பகுதியில் பால் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த பால் பண்ணையில் கடந்த 1ந்தேதி பீகார் மாநிலத்தை சேர்ந்த புக்கர்மஜி, அவரது மனைவி சண்மதிதேவி (வயது 46) மற்றும் சண்மதிதேவியின் சகோதரர் கிருஷ்ண மஜி ஆகியோர் வேலைக்கு சேர்ந்துள்ளனர். இவர்கள் 3 பேரும் பால் பண்ணையில் உள்ள ஒரு தகர கொட்டகை வீட்டில்தங்கி, வேலைபார்த்து வந்தனர்.

இந்நிலையில் புக்கர் மஜிக்கு வடமாநிலத்தை சேர்ந்த வேறொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால் புக்கர் மஜிக்கும், சண்மதிதேவிக்கும் இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது. இதேபோல் நேற்று முன்தினம் இரவும் கணவன், மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த புக்கர்மஜி கட்டையாலும், ஹாலோபிளாக் கல்லாலும் சண்மதிதேவியின் தலையில் பலமாக அடித்துள்ளார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதையடுத்து புக்கர்மஜி அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த கிருஷ்ணமஜி, பால் பண்ணை உரிமையாளர் முருகையனுக்கு தகவல் தெரிவித்தார். உடனே அவர் வேலாயுதம்பாளையம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில், அரவக்குறிச்சி துணை போலீஸ் சூப்பிரண்டு அப்துல்கபூர், க.பரமத்தி போலீஸ் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) ஓம் பிரகாஷ் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

பின்னர் சண்மதிதேவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த படுகொலை குறித்து வேலாயுதம்பாளையம் போலீசார் வழக்குப்பதிந்து, தப்பியோடிய புக்கர்மஜியை வலைவீசி தேடி வருகின்றனர். கள்ளக்காதலை கண்டித்ததால் வடமாநில பெண்ணை கணவரே அடித்துக் கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாமியாரை இரும்பு கம்பியால் தாக்கிய மருமகன்

பெரம்பூர், ஜூலை 7

சென்னை வியாசர்பாடி சாஸ்திரி நகர் 7வது தெருவைச் சேர்ந்தவர் சுப்பிரமணி. இவரது மனைவி அமுதா (58 வயது). இவர்களது 2வது மகளான கவிதாவை, வியாசர்பாடி பி.வி.காலனியை சேர்ந்த முருகன்(41 வயது) என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தனர். கணவன்மனைவி இடையே ஏற்பட்ட தகராறில் கவிதா, கணவருடன் கோபித்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகவும், தற்போது அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை எனவும் தெரிகிறது. இதனால் கவிதாவின் தாயார் அமுதா, தனது மகள் எங்கே? என கேட்டு மருமகன் முருகனிடம் தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதில் ஆத்திரமடைந்த முருகன், மாமியார் அமுதாவை இரும்பு கம்பியால் தாக்கினார். இதில் தலை மற்றும் மூக்கில் ரத்த காயம் அடைந்த அமுதா, சென்னை ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து எம்.கே.பி. நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# விஷ சாராய இழப்பீடு; ரூ.10 லட்சம் என்பது அதிகம் சென்னை ஐகோர்ட்டு

சென்னை, ஜூலை 7

கள்ளக்குறிச்சி, கருணாபுரத்தில் விஷச்சாராயம் குடித்து இதுவரை 65 பேர் பலியாகியுள்ளனர். பலியானவர்கள் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த முடிவை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த முகமது கோஸ் என்பவர் ஐகோர்ட்டில் பொது நல மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், கள்ளச்சாராயம் குடிப்பது சட்டவிரோத செயல். கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களை பாதிக்கப்பட்டவர்களாக கருதக்கூடாது.

தீ விபத்து உள்ளிட்ட விபத்துக்களில் பலியாவோருக்கு குறைந்த இழப்பீடு வழங்கும் நிலையில், விஷச்சாராயம் குடித்து பலியானவர்களுக்கு எந்த அடிப்படையில் அதிக இழப்பீடு வழங்கப்படுகிறது என்பதை அரசு தெளிவுபடுத்தவில்லை. விஷ சாராயம் குடித்து உயிரிழந்தவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகளோ, சமூக சேவகர்களோ, சமூகத்துக்காக உயிர் தியாகம் செய்தவர்களோ அல்ல என்பதால், அவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கும் அரசு உத்தரவை ரத்து செய்ய வேண்டும்" என கூறப்பட்டு இருந்தது.



இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபீக் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, விஷ சாராயம் குடித்து மரணமடைந்தவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு என்பது அதிகம் எனவும், இவ்வளவு அதிக தொகையை எப்படி வழங்க முடியும் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். மேலும், இந்த தொகையை மறுபரிசீலனை செய்வது குறித்து அரசின் கருத்தை அறிந்து தெரிவிக்கும்படி உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை 2 வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.

# தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்த ஒன்றரை வயது குழந்தை பலி

கும்மிடிப்பூண்டி, ஜூலை 7

சென்னை ரெட்டேரியில் வசித்து வரும் தனியார் நிறுவன ஊழியர் அருண்குமார் (30 வயது). இவரது மனைவி துர்கா (26 வயது). இவர்களுக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகிறது. தற்போது 6 மாத கர்ப்பிணியான துர்கா, தனது ஒன்றரை வயது பெண் குழந்தையான கிருத்திகாவுடன் துராபள்ளத்தில் உள்ள தாய் வீட்டில் தங்கி இருந்தார்.

இந்த நிலையில், வீட்டில் தாய் துர்கா தூங்கிகொண்டு இருந்தார். குழந்தை கிருத்திகா தாய் பக்கத்தில் விளையாடிக் கொண்டு இருந்தது. சிறிது நேரத்தில் குழந்தை கிருத்திகாவை காணவில்லையே என துர்கா தேடினார். அப்போது வீட்டின் வெளியே 2 அடி ஆழம் உள்ள தண்ணீர்தொட்டியில் குழந்தை கிருத்திகா தவறி விழுந்திருப்பது தெரிய வந்தது. அதிர்ச்சி அடைந்த துர்கா குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக கும்மிடிப்பூண்டி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.



தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்த குழந்தை கிருத்திகாவின் உடல் பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து ஆரம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரூ.822 கோடி குத்தகை பாக்கி உதகை ரேஸ் கிளப்பிற்கு சீல்



உதகமண்டலம், ஜூலை 7

உதகை மத்திய பேருந்து நிலையம் அருகே 100 ஆண்டுக்கு மேல் செயல்பட்டு வந்த உதகையில் உள்ள மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு வருவாய்த் துறை அதிகாரிகள் சீல் வைத்தனர். ரூ.822 கோடி குத்தகை பாக்கியை செலுத்தாததை அடுத்து கோர்ட்டு உத்தரவுப்படி வருவாய்த்துறை அதிகாரிகள் சீல் வைத்தனர்.

குத்தகை காலம் 1978 உடன் முடிந்த நிலையில் அதன்பிறகு குத்தகை தொகையை செலுத்தாமல் ரேஸ் கிளப் இயங்கி வந்துள்ளது. அரசு நோட்டீஸ் அளித்தும் ரேஸ் கிளப் நிர்வாகம் குத்தகை பாக்கியை செலுத்தாததை அடுத்து 2006ல் வருவாய்த் துறை சார்பில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு 2019ல் குதிரை பந்தய மைதானத்தை மீட்க உத்தரவிட்டது. இதை அடுத்து உதகை கோட்டாட்சியர் மகாராஜா தலைமையில் அதிகாரிகள் 52.4 ஏக்கர் மைதானத்தை மீட்டனர்.

# கள்ளத்தொடர்பை கைவிடாததால் மனைவி அடித்துக்கொலை கணவன் வெறிச்செயல்





உளுந்தூர்பேட்டை, ஜூலை 7

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள அ.குறும்பூர் கிராமத்தை சேர்ந்தவர் வீரமணி (வயது 33), கூலித் தொழிலாளி. இவருக்கும், கடலூா் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த மங்கலம் பேட்டை அருகே உள்ள கோவிலானூர் கிராமத்தை சேர்ந்த பச்சமுத்து மகள் தெய்வானை (28) என்பவருக்கும் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

இவா்களுக்கு ஒரு மகள், ஒரு மகன் உள்ளனா். கடந்த சில ஆண்டுகளாக வீரமணியும், தெய்வானையும் கேரளாவில் தங்கி கூலி வேலை பாா்த்து வந்துள்ளனா். அப்போது தெய்வானைக்கு, கேரளாவை சோ்ந்த ஆண் நண்பர் ஒருவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டதாக தொிகிறது. இதுபற்றி அறிந்த வீரமணி, தெய்வானையை பலமுறை கண்டித்துள்ளாா். இருப்பினும் அவா் அந்த நபருடன் பழகி வந்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து கடந்த சில வாரங்களுக்கு முன்பு இவா்கள் இருவரும் சொந்த ஊரான அ.குறும்பூர் கிராமத்திற்கு வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் தெய்வானை கேரளாவை சோ்ந்த ஆண் நண்பருடன் செல்போனில் பேசியதாக தொிகிறது. இதனால் ஆத்திரமடைந்த வீரமணி, அருகில் கிடந்த கட்டையை எடுத்து தெய்வானையை சரமாாியாக தாக்கியுள்ளாா். இதில் சுருண்டு விழுந்த அவர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து வீரமணி, தனது தம்பி சதீசை (27) அழைத்து நடந்த சம்பவம் பற்றி கூறியுள்ளாா். பின்னா் அவா்கள் இருவரும் சோ்ந்து, தெய்வானை தூக்குப் போட்டு கொண்டாா் என்று கூறி மருத்துவமனையில் சோ்த்துவிடுவோம் என்று திட்டம் தீட்டினா். அதன்படி, இருவரும் தெய்வானையை மீட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூாி மருத்துவமனைக்கு கொண்டு வந்து அவா் தூக்குப்போட்டு கொண்டதாக டாக்டா்களிடம் கூறினா். தொடா்ந்து தெய்வானையை பாிசோதனை செய்த டாக்டர்கள், அவா் இறந்து விட்டதாக தொிவித்தனா். மேலும் அவரது உடலில் காயங்கள் இருந்ததால் சந்தேகமடைந்த டாக்டா்கள் இது பற்றி போலீசாருக்கு தகவல் தொிவித்தனா்.

அதன்பேரில், உளுந்தூா்பேட்டை போலீசாா் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, வீரமணி மற்றும் சதீசிடம் விசாரணை நடத்தினா். அதில் வீரமணி, தனது மனைவியை கொலை செய்ததை ஒப்புக்கொண்டாா்.

தொடா்ந்து போலீசாா் கொலை வழக்காக பதிவு செய்து வீரமணியை கைது செய்தனா். மேலும் இதற்கு உடந்தையாக இருந்ததாக சதீசையும் போலீசாா் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனா்.

கள்ளத்தொடா்பை கைவிட மறுத்த மனைவியை கணவன் அடித்துக்கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# எம்.ஆர்.விஜயபாஸ்கரின் ஆதரவாளர்கள் வீடுகளில் சிபிசிஐடி போலீசார் சோதனை



கரூர், ஜூலை 7

ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் தனது பெயரும் சேர்க்கப்படலாம் என கருதி அதிமுக முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், முன்ஜாமீன் கேட்டு கரூர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனு கடந்த 25ந்தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் நிலமோசடி வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யப்பட்டு, எம்.ஆர்.விஜயபாஸ்கரை தீவிரமாக தேடி வருகின்றனர். இதனையடுத்து எம்.ஆர்.விஜயபாஸ்கர், தனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருப்பதால், அவரை உடனிருந்து கவனித்து கொள்ள வேண்டும் எனக்கூறி கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் இடைக்கால முன்ஜாமீன் மனுவோடு, முன்ஜாமீன் மனுவும் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான வாதங்கள் நேற்று நடைபெற்றது. அப்போது, இடைக்கால முன்ஜாமீன் தேவையில்லை. முன்ஜாமீன் மனுவை நாளை (அதாவது இன்று) விசாரணைக்கு எடுத்து கொள்வதாக நீதிபதி தெரிவித்தார். இதனையடுத்து முன்ஜாமீன் மனு மீதான விசாரணை இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கரின் ஆதரவாளர்கள் வீடுகளில் சிபிசிஐடி போலீசார் சோதனை நடத்தி வருகிறார்கள். கூலி நாயக்கனூர் கிராமத்தில் யுவராஜ் என்பவரது வீட்டில் 2 மணி நேரத்திற்கும் மேலாக 5 பேர் கொண்ட சிபிசிஐடி போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். தோட்டக்குறிச்சி பகுதியை சேர்ந்த செல்வராஜ், கவுண்டபாளையம் பகுதியை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி மற்றும் ரகு ஆகியோர் வீடுகளில் நில மோசடி வழக்கு தொடர்பான ஆவணங்களை சிபிசிஐடி போலீசார் தேடி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: திமுக வேட்பாளருக்கு ஆதரவாக வீடியோ வெளியிட்டு முதல்அமைச்சர் வாக்கு சேகரிப்பு



சென்னை, ஜூலை 7

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தல் வருகிற 10ந்தேதி (புதன்கிழமை) நடைபெற உள்ளது. இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 13ந்தேதி (சனிக்கிழமை) எண்ணப்படுகின்றன. தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் நடந்து வருகிறது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில், தி.மு.க., பா.ஜனதா கூட்டணியில் உள்ள பா.ம.க., நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் மட்டுமே போட்டியிடுவதால் அங்கு மும்முனை போட்டி நிலவுகிறது. தி.மு.க. வேட்பாளராக அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளராக சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளராக டாக்டர் அபிநயா ஆகியோர் களத்தில் உள்ளனர். தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே இருக்கும் நிலையில், தற்போது அங்கு பிரசாரம் சூடுபிடித்துள்ளது.

இந்த நிலையில், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டு வாக்கு சேகரித்தார். அதில் முதல்அமைச்சர் பேசியதாவது:

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் மண்ணின் மைந்தரான திமுக வேட்பாளர் ஆற்றல்மிக்க அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்யுங்கள். மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றக் கூடிய வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரிக்க வேண்டும். சாதனைகளால் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் திமுகவை ஆதரியுங்கள்.

வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு 20% உள்ஒதுக்கீடு வழங்கியது திமுக ஆட்சி. 1987 போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டில் பலியான போராளிகளுக்கு நினைவு மண்டபம் கட்டப்படுகிறது. சமூகநீதிக்கு எதிரான பாஜக கூட்டணியை விக்கிரவாண்டி தொகுதியில் தோற்கடிக்க வேண்டும். சமூகநீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# குழந்தையை உடலில் கட்டிக்கொண்டு கிணற்றில் குதித்து தாய் தற்கொலை



கோவை, ஜூலை 7

கோவை மாவட்டம் காரமடை அருகே பெள்ளாதி கிராமத்தை சேர்ந்தவர் சந்தோஷ் (வயது 31). இவர் மத்தம்பாளையத்தில் சைக்கிள் கடையில் வேலை செய்து வருகிறார். இவருடைய மனைவி கலாமணி (28). இவர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களின் 2½ வயது மகள் அஸ்விக்கா.

சந்தோஷ் நேற்று காலை தோட்டத்துக்கு சென்று விட்டார். அப்போது கலாமணி தனது மகளுடன் வீட்டில் இருந்து வெளியே சென்றார். அதன்பிறகு அவர் திரும்பிவரவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த கணவர் மற்றும் உறவினர்கள் பல இடங்களில் தேடிப்பார்த்தும் அவர்கள் கிடைக்கவில்லை. இது குறித்து அவர்கள் காரமடை போலீசில் புகார் செய்தனர்.

இந்த நிலையில் மதியம் 2 மணி அளவில் வீட்டின் அருகே இருந்த கிணற்றின் ஓரத்தில் கலாமணியின் செருப்பு கிடந்தது. இதனால் சந்தேகம் அடைந்த உறவினர்கள் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தனர். அங்கு கலாமணி மற்றும் குழந்தை அஸ்விக்கா ஆகியோர் பிணமாக கிடப்பதை பார்த்து உறவினர்கள் அதிர்ச்சி அடைந்து கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

இது குறித்த தகவலின் பேரில் காரமடை போலீசார் மற்றும் மேட்டுப்பாளையம் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் கிணற்றில் பிணமாக கிடந்த கலாமணி, அஸ்விக்கா ஆகிய 2 பேரின் உடல்களையும் மீட்டனர்.

அப்போது கலாமணி தனது மார்போடு சேர்த்து மகள் அஸ்விக்காவை துணியால் இறுக்கமாக கட்டிக் கொண்டு கிணற்றில் குதித்து தற்கொலை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் தாய் மகளின் உடல்களை மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து காரமடை போலீசார் வழக்கு பதிவு செய்து குழந்தையுடன் பெண் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். கலாமணிக்கு திருமணம் ஆகி 4 ஆண்டுகளே ஆவதால் கோட்டாட்சியர் விசாரணையும் நடைபெற்று வருகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# 'ரீல்ஸ்' மோகத்தால் எல்லை மீறும் சம்பவம்: கஞ்சா புகைப்பது போன்று 'இன்ஸ்டாகிராமில்' வீடியோ பதிவிட்ட வாலிபர்கள்

பழனி, ஜூலை 7

பழனியில் வாலிபர்கள் 5 பேர் கஞ்சா புகைப்பது போன்று 'ரீல்ஸ்' வீடியோ எடுத்து அதை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு உள்ளனர். இது சமூக வலைத்தளத்தில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பின்னர் வாலிபர் ஒருவர், தனது கையில் கஞ்சாவை வைத்து கசக்குகிறார். பின்னர் அதை பீடியில் வைத்து சுருட்டி புகைபிடிக்க நெருப்பை பற்ற வைத்து அதை புகைக்கிறார். இதனையடுத்து அவருடன் சேர்ந்து, அவரது நண்பர்களும் கஞ்சாவை புகைக்கின்றனர். சிறிது நேரத்தில் முதலில் புகைத்தவர் போதையில் மயங்கி கீழே சாய்ந்து விழுகிறார். அதையடுத்து அவரது நண்பர்கள் 4 பேர் அவரை தூக்கி செல்வது போன்று பதிவாகி உள்ளது. இது பற்றி பழனி போலீசார் கூறுகையில், '

இன்ஸ்டாகிராமில்' வீடியோ பதிவிட்ட வாலிபர்கள் குறித்து விசாரித்து வருகிறோம். அவர்கள் புகைத்தது கஞ்சா தான் என்றால், அவர்களுக்கு யாரிடம் இருந்து கிடைத்தது என்பது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

# மதுபோதையில் சாலையில் அமர்ந்து ரகளை செய்த தனியார் பஸ் கண்டக்டர்



திருச்சி, ஜூலை 7

திருச்சி மத்திய பஸ் நிலையத்தை சுற்றி 5க்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகள் உள்ளன. இங்கு எந்நேரமும் கூட்டம் நிரம்பி வழியும். இந்த நிலையில் இங்குள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்திய வாலிபர் ஒருவர், மது போதையில் மத்திய பஸ் நிலையம் அருகே சாலையில் அமர்ந்து போவோர், வருவோரிடம் ரகளை செய்து கொண்டிருந்தார். அத்துடன் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டும் இருந்தார்.

இதுபற்றி மத்திய பஸ் நிலையத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தில் பொதுமக்கள் புகார் செய்தனர். பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், அந்த வாலிபரை அங்கிருந்து செல்லுமாறு கூறினர். ஆனால், அவர் அதை கேட்காமல் தன்னை அப்புறப்படுத்த வந்த போலீசாரின் கைகளை தட்டி விட்டார்.

இதையடுத்து அவரை பிடித்து தர, தரவென இழுத்து சென்று சாலையின் ஓரத்திற்கு கொண்டு சென்று விட்டனர். பின்னர் அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் தனியார் பஸ் கண்டக்டர் என்பதும், மது போதையில் ரகளை செய்ததும் தெரிய வந்தது. இதையடுத்து அவரை போலீசார் எச்சரித்ததுடன், போதையை தெளியவைத்து அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தால் பஸ் நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# லாரி மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதல்; காதல் ஜோடி பரிதாப சாவு

நெல்லை, ஜூலை 7

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள கடம்போடு வாழ்வு கிராமத்தை சேர்ந்தவர் சாலமன் (வயது 26). ராதாபுரம் அருகே உள்ள பழவூர் கிராமத்தை சேர்ந்தவர் மதுமிதா (19). இவர்கள் 2 பேரும் வள்ளியூரில் உள்ள ஒரு ஜவுளிக்கடையில் ஊழியர்களாக பணியாற்றி வந்தனர். மேலும் இவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டு காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. வேலைக்கு செல்லாமல் 2 பேரும் மோட்டார் சைக்கிளில் நாங்குநேரி நம்பிநகர் பகுதிக்கு சென்றனர். பின்னர் சிறிது நேரத்தில் வள்ளியூர் நோக்கி திரும்பி வந்து கொண்டு இருந்தனர். நாங்குநேரி தாலுகா அலுவலகம் எதிரே உள்ள நான்கு வழிச்சாலை சர்வீஸ் சாலையில் செல்வதற்கு பதிலாக தவறுதலாக மெயின் ரோட்டில் எதிர்புறத்தில் சென்றனர். அப்போது அந்த வழியாக கேரள மாநிலம் ஆலுவா பகுதியில் இருந்து மீன் கழிவுகளை ஏற்றிக் கொண்டு தூத்துக்குடி நோக்கி ஒரு லாரி வந்தது. கண் இமைக்கும் நேரத்தில் லாரி மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட சாலமன், மதுமிதா ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த நாங்குநேரி கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு பிரசன்ன குமார் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக இன்ஸ்பெக்டர் பாலமுருகன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். லாரி மோதி காதல் ஜோடி உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஓட்டல் சாம்பாரில் பல்லி கிடந்ததால் பரபரப்பு 3 பேருக்கு சிகிச்சை

விழுப்புரம், ஜூலை 7

விழுப்புரத்தில் திருச்சி சாலையில் உள்ள ஒரு ஓட்டலில் நேற்று காலை சிலர், காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஒருவரின் இலையில் ஊற்றப்பட்ட சாம்பாரில் பல்லி கிடந்தது. இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அவர் உடனே இதுபற்றி ஓட்டல் ஊழியர்களிடம் கூறிவிட்டு அங்கிருந்து சென்றார்.

இதையறிந்ததும் அதே ஓட்டலில் உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த விழுப்புரம் ஆசாகுளத்தை சேர்ந்த ஆனந்த் (வயது 49), கண்டாச்சிபுரம் திருமலைப்பட்டை சேர்ந்த கோவிந்தசாமி (60), குணசேகர் (35) ஆகியோருக்கு லேசான மயக்கம் ஏற்படுவதாகவும், வாந்தி வருவதாகவும் ஓட்டல் ஊழியர்களிடம் கூறியுள்ளனர்.

இதையடுத்து அவர்கள் ஒரு ஆட்டோவில் 3 பேரையும் ஏற்றிக் கொண்டு விழுப்புரத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவர்கள் 3 பேரும் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். இதனிடையே விழுப்புரம் உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் ஸ்டாலின் ராஜரத்தினம் அந்த ஓட்டலுக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்.

பின்னர், ஓட்டலுக்கு 2 நாள் விடுமுறை விடப்பட வேண்டும் என்று அதன் உரிமையாளருக்கு அறிவுறுத்தியதோடு ஓட்டலில் சமையல் செய்யும் இடம் மற்றும் ஓட்டலின் பின்புற பகுதியை சுகாதாரமாக வைத்திருக்கும்படி அறிவுறுத்தினார். மேலும் உணவு சமைக்கும்போது பாதுகாப்பான முறையிலும், சுகாதாரமான முறையிலும் தயார் செய்யும்படியும், தவறும்பட்சத்தில் உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார். இந்த சம்பவம் விழுப்புரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்கறிஞர் தோழர் ஆர்ம்ஸ்ட்ராங் படுகொலை கண்டித்து செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செஞ்சி பார் அசோசியேஷன் தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும மூத்த வழக்கறிஞர் ஜி கே அவர்களுடைய தலைமையில் மூத்த வழக்கறிஞர்கள் உட்பட செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர்கள் நீதிமன்ற வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் கண்டன முழக்கங்கள் நிறைவேற்றப்பட்டு அதனோடு மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட காட்சி அதனைத் தொடர்ந்து கயவர்களால் கொலை செய்யப்பட்ட வழக்கறிஞர் தோழர் ஆர்ம்ஸ்ட்ராங் அவருடைய வாழ்க்கை வரலாறும் அவர்களுடைய சமூகத்தின் பற்றுதலும் மூத்த வழக்கறிஞர் நடராஜன் அவர்கள் எடுத்துரைத்தார்

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
7.7.2024

# தெலுங்கு நடிகர் ராஜ் தருண் மீது மோசடி புகார்



தெலுங்கு நடிகர் ராஜ் தருண் 2013ம் ஆண்டு 'உய்யால ஜம்பாலா' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார், அந்த திரைப்படத்திற்காக சிறந்த ஆண் அறிமுகத்திற்கான விருதை வென்றார் .

தெலுங்கு திரைப்பட நடிகர் ராஜ் தருண், தனது லிவ்இன் பார்ட்னரை ஏமாற்றியதாகக் கூறி அவர் மீது காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

போலீசில் அவரது பெண் நண்பர் அளித்த புகாரில், தானும் ராஜ் தருணும் 10 ஆண்டுகளாக காதலிப்பதாகத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தன்னை வேறொரு பெண்ணுடன் சேர்ந்து ஏமாற்றி விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவரது பெண் நண்பர் லாவண்யா நடிகர் ராஜ் தருணுடன் வாழ விருப்பம் தெரிவித்தார்.

புகாரை விசாரித்து வருவதாகவும், புகார்தாரர் ஏதேனும் ஆதாரங்களை சமர்ப்பித்தால் ஆதாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

# ஏழு கடல் ஏழு மலை படத்தின் 2வது பாடல் வெளியானது




பிரபல இயக்குனர் ராம் எதார்த்தமான படங்களை இயக்கி ரசிகர்கள் மனதை வென்றவர். இவர் கற்றது தமிழ், தங்க மீன்கள், பேரன்பு, தரமணி உள்ளிட்ட வெற்றி படங்களை இயக்கியுள்ளார்.

நீண்ட நாட்களுக்கு பின் ராம் இயக்கத்தில் நிவின் பாலி, அஞ்சலி, சூரி நடித்திருக்கும் திரைப்படம் ஏழு கடல் ஏழு மலை. யுவன் சங்கர் ராஜா இசையமைக்கும் இத்திரைப்படத்திற்கு ஏகாம்பரம் ஒளிப்பதிவு செய்துள்ளார். மாநாடு படத்தைத் தொடர்ந்து தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி தனது வி ஹவுஸ் புரொடக்ஷன்ஸ் சார்பில் இப்படத்தை தயாரிக்கிறார்.

இந்த படத்தின் பணிகள் நிறைவடைந்துள்ள் நிலையில் சமீபத்தில் ரோட்டர்டாம் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதன் பின்னர் ரஷ்யாவின் மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அந்த இரண்டு விழாக்களிலும் இந்த படத்துக்கு நல்ல வரவேற்பும் பாராட்டுகளும் கிடைத்தன.

இதனைத் தொடர்ந்து டிரான்சில்வேனியா திரைப்பட விழாவுக்கு இந்த படம் தேர்வு செய்யப்பட்டது. ஜனவரி மாதம் இப்படத்தின்கிளிம்ப்ஸ்வீடியோவைவெளியிட்டதைத்தொடர்ந்துஇணையத்தில்இக்காட்சிகள்பரவலாகபேசப்பட்டன. ராமின் முதல் படமான கற்றது தமிழ் பாணியில் காட்சிகள் அமைக்கப்பட்டதாக கருத்துக்களை பகிர்ந்தனர்.

இதன் பின்னர் இப்படத்தின் முதல் பாடலான 'மறுபடி நீ' என்னும் பாடலை பிப்ரவரி மாதம் படக்குழு வெளியிட்டது. இப்பாடலை பாடலாசிரியர் மதன்கார்க்கி எழுத நடிகர் சித்தார்த் பாடியிருந்தார்.

இந்த நிலையில் 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படத்தின் 2வது பாடல் 'ஏழேழு மலை' எனும் பாடல் இன்று மாலை 6 மணிக்கு வெளியாகியுள்ளது. இதில்கூடுதல்சிறப்பு என்னவென்றால் யுவன்சங்கர்ராஜா இசையில் சந்தோஷ் நாராயணன் பாடுவது இதுவே முதல்முறை. இந்த பாடலுக்கு மதன் கார்கி பாடல் வரிகளை எழுதியுள்ளார். பாடலின் காட்சிகள் இணையத்தில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.

# ரஜினிகாந்தின் 'கூலி' படத்தில் இணைந்த சுருதிஹாசன்

நடிகர் கமல்ஹாசனின் மூத்த மகள், நடிகை, பாடகி என பன்முகத் திறமை கொண்டவர் சுருதிஹாசன் . இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு வெளியான 'லக்' என்ற திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். அதனை தொடர்ந்து தமிழில் ஏழாம் அறிவு, சிங்கம், 3, பூஜை உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்தார்.தமிழ், இந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வரும் சுருதிஹாசன் கடைசியாக சலார் படத்தின் 2வது பாகத்தில் நடித்தார். ராஜ் கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிப்பில், சுருதிஹாசன் இசையமைத்து இயக்கிய பாடலுக்கு கமல் ஹாசன் பாடல் வரிகள் எழுதியிருந்தார். அப்படி உருவான 'இனிமேல்' என்ற ஆல்பத்தில் லோகேஷ் கனகராஜ் சுருதிஹாசனுடன் இணைந்து நடித்திருந்தார். 4 ஆண்டுகளாக சாந்தனு ஹன்சாரிகா என்பரை காதலித்து வந்த சுருதிஹாசன், கருத்துவேறுபாடு காரணமாக சமீபத்தில் பிரேக் அப் செய்தார். லோகேஷ் கனகராஜ்இயக்கத்தில்ரஜினிநடிக்கும்'கூலி'படத்தில்சுருதிஹாசன்நடிக்கிறார். முதல்நாள்படப்பிடிப்பில் கலந்துகொண்ட சுருதிஹாசன், முதல் நாள் ஷூட்டிங் என தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "Day 1 coolie" என பதிவிட்டுள்ளார். அந்த பதிவு தற்போது இணையத்தில் மிகவும் வைரலாகி வருகிறது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ரஜினியுடன் இணைந்து இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் சத்யராஜ் நடிக்க உள்ளார். படத்தில் நடிக்க உள்ள நடிகர்கள் குறித்து படக்குழு அதிகாரபூர்வமாக தெரிவிக்கவில்லை.






# தனுஷின் ராயன் திரைப்படத்தின் 3வது பாடல் வெளியானது



நடிகர் தனுஷ் தனது 50 வது படத்தை அவரே இயக்கி நடித்துள்ளார். இப்படத்துக்கு 'ராயன்' என பெயரிடப்பட்டுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.

இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ்ராஜ், காளிதாஸ் ஜெயராம், சுதீப் கிசன், துஷாரா விஜயன் என நட்சத்திர பட்டாளத்தையே களமிறக்கியுள்ளார் தனுஷ். இப்படத்தின் அடுத்தடுத்த போஸ்டர்கள் வெளியாகி ரசிகர்களிடையே படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிறச் செய்துள்ளது. மேலும் கடந்த மே 9 ம் தேதி இப்படத்தில் ஏர்.ஆர் ரகுமான் இசையில் தனுஷ் பாடிய 'அடங்காத அசுரன்' என்ற முதல் பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், கேங்ஸ்டர் கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படம் ஜூலை மாதம் 26ந் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

படத்தின் அடுத்த பாடலான 'ராயன் ரம்பில்' என்ற பாடல் தற்பொழுது வெளியாகியுள்ளது. இப்பாடல் இரு ராப் பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலை ஏ.ஆர் ரகுமான் இசையில் அறிவு எழுதி பாடியுள்ளார். படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை தனியார் கல்லூரியில் மிக பிரம்மாண்டமாக நடைப்பெறவுள்ளது.

# பெண்களின் மாதவிடாய் காலம் குறித்து நடிகை நயன்தாராவின் பதிவு



இயக்குநர் விக்னேஷ் சிவன் 'போடா போடி'படத்தின்மூலமாகஅறிமுகமானார். அந்த படத்தில் சிலம்பரசன், வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் நடித்திருந்தனர். 2012ம் ஆண்டு வெளியான போடா போடி தோல்வி அடைந்ததை அடுத்து மூன்று வருடங்கள் திரைப்படம் இயக்காமல் இருந்தார். அதனையடுத்து நானும் ரவுடிதான்படத்தைஇயக்கினார்விக்னேஷ் சிவன். தனுஷ் தயாரிப்பில் உருவான அப்படத்தில் நயன்தாரா நடித்தார். இதன் மூலம் அனைவரும் திரும்பிப்பார்க்கும் இயக்குநராக மாறினார் விக்னேஷ். இயக்குநர் விக்னேஷ் சிவனும் நடிகை நயன்தாராவும் கடந்த 2022ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர். இத்தம்பதியினர், வாடகைத்தாய் மூலம் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்று பெற்றோர்களாகவும் இருக்கின்றனர். அவர்களது குழந்தைகளுக்கு உயிர், உலக் என வித்தியாசமாக பெயரிட்டுள்ளனர். இக்குழந்தைகளின் புகைப்படங்களையும், காணொளிகளை அடிக்கடி இருவரும் சமூக வலைதளங்களில் பதிவேற்றி வருவது வழக்கம்.

தமிழ், மலையாளம், தெலுங்கு என தென்னிந்திய மொழிகளில் வெளியாகும் படங்களில் பிசியாக நடித்து வரும்நயன்தாரா, மண்ணாங்கட்டி என்கிற படத்தில்நடித்து முடித்துள்ளார். நயன்தாராதனது இன்ஸ்டாகிராமில் புகைப்படங்களுடன் சில தகவல்களை பதிவிட்டுள்ளார். அதில், " ஒரு பெண் ஒரு மாதத்தில் பலவிதமான நிலைகளை கடக்க வேண்டியிருக்கிறது. மாதவிடாய் காலங்களில் ஏற்கனவே பலவிதமான ஹார்மோன்மாற்றங்களை சந்தித்துவரும் நாம் நேசிக்கப்படுவதற்கும் ஆறுதல் படுத்தப்படுவதற்கும் ஏங்குகிறோம். நான் எனது பெமி9 சானிடரி நாப்கின் உபயோகித்து வசதி கண்டுள்ளேன்.

அதேபோல் நீங்களும் உங்களுக்கு வசதியான சௌகரியத்தை ஏற்படுத்தும் சானிடரி நாப்கின் ஒன்றினை தேர்வு செய்யுங்கள். இதை நான் இந்தத் தயாரிப்புடன் சம்மந்தம் இருப்பதால் சொல்வதாக நினைக்க வேண்டாம். இது எனக்கு மிகவும் நன்றாக வேலை செய்ததால் சொல்லுகிறேன். ஒவ்வொரு பெண்ணுக்கும் பிரச்னையில்லாத சௌகரியமான மாதவிடாய் காலம் அமைய வாழ்த்துகிறேன். மாதத்தின் மற்ற நேரத்தைப்போல இந்த நேரமும் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்" எனக் கூறியுள்ளார்.

# கனடா ஓபன் பேட்மிண்டன்: கால்இறுதி போட்டியில் திரிஷா காயத்ரி ஜோடி தோல்வி



கனடாஓபன்பேட்மிண்டன்போட்டிஅங்குள்ள கல்கேரி நகரில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நடைபெற்ற கால்இறுதி போட்டியில் உலக தரவரிசையில் 22வது இடத்தில் இருக்கும் இந்தியாவின் திரிஷா ஜாலி காயத்ரி கோபிசந்த் இணை, தைவானின் பெய் ஷான் ஹங் என்சூ இணையுடன் மோதியது.

இந்த போட்டியில் திரிஷா ஜாலி காயத்ரி கோபிசந்த் ஜோடி 1821, 2119, 1621 என்ற செட் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

# உலகக்கோப்பையை வெல்வது சுலபம் என நினைத்தேன் ரோகித் சர்மா



2007ம் ஆண்டுக்கு பின் டி20 உலகக்கோப்பையை இந்தியா வெற்றுள்ளது. இதையடுத்து, பார்படாசில் இருந்து நாடு திரும்பிய இந்திய அணியினர் உலகக்கோப்பையுடன் பிரதமர் மோடியை சந்தித்தனர். பின்னர், மும்பையில் கோப்பையுடன் அணிவகுப்பு நடத்தினர்.


இந்நிலையில், உலகக்கோப்பையை வெல்வது சுலபம் என நினைத்தேன் என்று இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், 2007ம் ஆண்டு உலகக்கோப்பையை வெல்வது மிகவும் சுலபம் என நான் நினைத்தேன். ஆனால், 2007ம் ஆண்டுக்கு பிறகு வெற்றிபெற முடியாமல் நிறைய உலகக்கோப்பை தொடர்கள் சென்றுவிட்டன. ஊக்கத்தோடும், உறுதியோடும் இந்த அணியின் கேப்டனாக செயல்படுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது. அமெரிக்காவின் உள்ள மோசமான மைதானம் உள்பட பல்வேறு சவால்களை கடந்து கோப்பையை வெல்லவேண்டும் என வீரர்கள் உறுதியாக இருந்தனர்

# ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப்: ஜெர்மனியை வீழ்த்தி ஸ்பெயின் அரைஇறுதிக்கு முன்னேற்றம்

17வது ஐரோப்பிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஜெர்மனியில் நடந்து வருகிறது. இதில் நாக்அவுட் சுற்று (ரவுண்ட் ஆப் 16) முடிவில் பிரான்ஸ், போர்ச்சுகல், நெதர்லாந்து, ஸ்பெயின், ஜெர்மனி, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, துருக்கி ஆகிய 8அணிகள்கால்இறுதிக்கு தகுதி பெற்றன. இந்த நிலையில் இந்த தொடரில் நேற்று இரவு நடைபெற்ற கால்இறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் ஜெர்மனி அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் எந்த கோலும் அடிக்கவில்லை. இந்த நிலையில் இரண்டாம் பாதியில் ஆட்டத்தின் 51வது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் வீரர் டேனி ஒல்மா ஒரு கோல் அடித்தார். ஆட்டத்தின் 89 வது நிமிடத்தில் ஜெர்மனி அணி வீரர் புளோரியன் விர்ட்ஸ் ஒரு கோல் அடித்தார்.

இந்த நிலையில் வழக்கமான ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் 11 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது. இதையடுத்து கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்தில் 119 வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் மைக்கேல் மெரினோ ஒரு கோல் அடித்தார். இதையடுத்து ஸ்பெயின் அணி 21 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி அரைஇறுதிக்கு முன்னேறியது.



# டி.என்.பி.எல்: சேப்பாக் சூப்பர் கில்லீசை வீழ்த்தி கோவை கிங்ஸ் அபார வெற்றி



தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் டி.என்.பி.எல். கிரிக்கெட் 2016 ம் ஆண்டு அறிமுகம் ஆனது. இதுவரை 7 சீசன் நடந்துள்ளது. இதில் அதிகபட்சமாக சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 4 முறை சாம்பியன் கோப்பையை கைப்பற்றி வெற்றிகரமான அணியாக விளங்குகிறது. இந்த நிலையில் 8வது டி.என்.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடங்கியது. சேலத்தில் நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் மற்றும் லைக்கா கோவை கிங்ஸ் அணிகள் மோதின. இதில் டாசில் வென்ற சேப்பாக் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து களமிறங்கிய கோவை கிங்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 141 ரன்கள் எடுத்தது. அந்த அணி யில் அதிகபட்சமாக சச்சின் 63 ரன்களையும், முகிலேஷ் 31 ரன்களையும் குவித்தனர். சேப்பாக் தரப்பில் அபிஷேக் தன்வர் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனை தொடர்ந்து 142 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சேப்பாக் அணியின் தொடக்க விரிஅர்களாக சந்தோஷ் குமார், ஜெகதீசன் களமிறங்கினர். சந்தோஷ் ரன் எதுவும் எடுக்காமல் (0) அவுட் ஆனார். ஜெகதீசன் 18 ரன்களில் அவுட் ஆனார். அடுத்துவந்த கேப்டன் பாபா அபராஜித் மற்றும் ரஞ்சன் பால் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அபராஜித் 38 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். ரஞ்சன் 40 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ரிட்டையர்டு அவுட் முறையில் வெளியேறினார். அடுத்துவந்த பெர்னாண்டோ 2 ரன்னிலும் ஜிதேந்திர குமார் 14 ரன்னிலும் அவுட் ஆகினர். இறுதியில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 128 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் சேப்பாக்கை 13 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி லைகா கோவை கிங்ஸ் அபார வெற்றிபெற்றது.

# இந்த முறை ஒலிம்பிக் பதக்கத்தின் நிறத்தை மாற்றுவேன் பி.வி.சிந்து நம்பிக்கை

33வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஜூலை 26ம் தேதி தொடங்குகிறது. ஆகஸ்ட் 11ம்தேதி வரை இந்தவிளையாட்டு திருவிழா நடைபெறுகிறது. இதில் இந்தியா சார்பில் 102 வீரர்வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள். கொரோனாவால் ஒரு ஆண்டு தள்ளிவைக்கப்பட்டு 2021ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த கடந்த ஒலிம்பிக்கில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என்று 7 பதக்கம் வென்றது.

இந்த ஒலிம்பிக்கில் இரட்டை இலக்கத்தில் பதக்கம் வெல்வதை குறிவைத்து இந்திய அணி ஆயத்தமாகி வருகிறது. இந்த நிலையில், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்களுடன் பிரதமர் மோடி இன்று கலந்துரையாடினார். அப்போது காணொளி வாயிலாக பிரதமர் மோடியுடன் பி.வி. சிந்து பேசி இருந்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஒலிம்பிக்கில் மூன்றாவது முறையாக இந்தியா சார்பில் நான் பங்கேற்க உள்ளேன். 2016 ஒலிம்பிக்கில் நான் வெள்ளி வென்று இருந்தேன். 2020 ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று இருந்தேன். இந்த முறை பதக்கத்தின் நிறத்தை மாற்றுவேன் எனநம்புகிறேன். மீண்டும் ஒரு முறை ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வேன் என்பதில் உறுதியாக உள்ளேன். இந்த முறை ஒலிம்பிக்கில்நிறையஅனுபவத்துடன்கலந்துகொள்கிறேன். இந்தியா சார்பில் பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அனைவருக்கும் என் வாழ்த்துகள். இதில் அழுத்தம் இருக்கும். உங்கள் கடின உழைப்பு இங்கு அழைத்து வந்துள்ளது. இதனை மற்றும் ஒரு விளையாட்டு தொடராக எடுத்துக்கொண்டு விளையாட வேண்டும். நூறு சதவீத திறனை வெளிப்படுத்தினால் போதுமானது. இவ்வாறு அவர் கூறினார்.



**நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்**
**பயனில சொல்லாமை நன்று**

**விளக்கம்:**

**அறம் இல்லாதவற்றைச் சொன்னாலும் சொல்லலாம், சான்றோர் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாமல் இருத்தல் நன்மையாகும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.